# தொல்காப்பியமும் அகவாழ்வும்

*முனைவர் அ. பாக்கியமுத்து*
இணைப் பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறை தலைவர்
தமிழ்த்துறை, திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம்

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: செப்டம்பர்

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-5208

## முன்னுரை

தமிழ் மொழிக்கு உயிரும், உடம்பும் என்று மதிக்கத்தக்க சங்க இலக்கியம் பெரும்பாலும் காதல் வாழ்வு பற்றி கூறும் அகவிலக்கியமாகும். "அகப்பொருள் இலக்கியம் என்று பெயர் பெற்றிருப்பினும். இல்லற வாழ்வு தொடர்பான செய்திகளும், இயற்கைச் சூழல்களும் அரசியல், போரியல் நெறிகளும், உயர்ந்த எண்ணங்களும் இவ்விலக்கியங்களில் நிரம்பக் கிடைக்கின்றன."[1] இத்தகைய அகவிலக்கியங்களில் அமையும் அகவாழ்வு குறித்து தொல்காப்பியம் குறிப்பிடும் செய்திகளை இக்கட்டுரை வழியாக காணலாம்.

## அகப்பொருள் - விளக்கம்

அகம் என்பது பொதுவாகக் காதற் பாடல்களைக் குறிக்கும். உள்ளத்தில் புலப்படும் உணர்வுகள் அகம் என்றும், போர், வீரம், கொடை, ஆட்சி, புகழ் முதலிய பிற வாழ்க்கைத் துறைகளைப் புறம் என்றும் கூறுதல் தமிழ் மரபாகும் ஆனால் இலக்கியங்களுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் அகம் என்பதற்குத் தனியே விளக்கம் கூறவில்லை எனினும் அதற்கு உரையெழுதிய இளம்புரணர், "அகப்பொருளாவது போக நுகர்ச்சியாகலான் அதனான் ஆய பயன் தானே அறிதலின் அகம்"[2] என்கிறார்.

இதனை பற்றி நச்சினார்க்கினியர் கூறுமிடத்து,

"ஒத்த அன்பான ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய். யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்புறுவதோர் பொருளாதலின் நிகழ்கின்ற இன்பத்திற்கு அகமென்றது ஓர் ஆகுபெயர்"[3] என விளக்குவார்.

அகம் என்னும் சொல், மனம், உள்ளிடம், இடம் உள்ளிட்ட பலபொருள் தரும் ஓர் சொல்லாகும். அகமென்பது உள்ளமாகிய மன உணர்வினால் நுகர்ந்து இனபமுறம் காம இன்பத்தை உணர்த்துகிறது. அகம் என்னும் சொல்லுக்கு உள்ளம் என்னும் பொருள் அடிப்படையில் எழுந்த விளக்கங்களாகும்.

மேலும், இச்சொல் இல்லத்தையும் குறிக்கும். இல்லத்தில் உள்ள அக உறுப்பினர்களான தாய், தந்தை, தலைவி, தோழி, தலைவன், பாங்கன், இளையோர் போன்றோரைக் கொண்டு அமைவதால் அகம் எனப்படும்.

### அகத்திணை மரபுகள் – விளக்கம்

"எந்த பொருளை எந்தச் சொல்லினால் எந்த நெறியுறச் சான்றோர்கள் சொல்லினார்களோ, அந்தப் பொருளை அந்தச் அந்நெறியுறச் சொல்லுதலே மரபு"[4] என்பர்.

ஆதலால் இலக்கியங்கள் மரபு வழிப்பட்ட சொற்களால் அமைய வேண்டும். மரபு நெறியிலிருந்து சிறிதளவும் திரிதல் கூடாது எனத் தொல்காப்பியம் அழுத்தந்திருத்தமாக எடுத்துரைக்கின்றது.

**"மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை**
**மரபு வழிப்பட்ட சொல்லி னான்"[5]**

இதனைப் பற்றி மேலும் ஒரு நூற்பாவில் மரபு திரியமானால், உலகத்துச் சொல் லெல்லாம் பொருளிழந்தும் போகும் என்பதை,

**"மரபுநிலை திரியிற் பிரிது பிரிதாகும்"[6]**

எனத் தொல்காப்பியம் உணர்ந்துகின்றது. இலக்கண நூல்களும் மரபுநிலை திரியாமை மாட்சிமைக்கு உரியது என்று கூறுகின்றன.

### மரபுவழி அகத்தினை மரபுகள்

தமிழில் காலத்தால் முற்பட்டது சங்க இலக்கியம். அதனைத் திணை இலக்கியம் எனில் பொருத்தமுடையதாகும். ஏனெனில், அதனை அகத்திணை, புறத்திணை என்னும் இரு வகையினதாகப் பாகுபடுத்தியுள்ளனர். எனவே, இதனைப் பொருள் இலக்கியம் எனக்கொண்டு அகப்பொருள், புறப்பொருள் என வழங்கப்படுகிறது.

### அகப்பொருள் – விளக்கம்

அகப்பொருள் என்பது மனதளவில் உய்த்துணரப்படும் ஓர் உணர்வாகும். அது உள்ளம் மட்டும் நுகரும் பொருளாகும். அதனை உணர்ந்தவாறே கூறவியலாத் தன்மை கொண்டது. உணர்ந்தவரேயன்றிப் பிறர் அறியவியலாததாகும்.

"மணப்பருவமுற்ற ஆணும், பெண்ணும் மனம் ஒன்றுபட்டு இருவரும் ஒருவராய் ஒன்றிவாழும்நிகழ்ச்சியைஅகவொழுக்கம்"[7] என்பர்.

அகவொழுக்கம் என்பதே அகத் திணையாகும். அஃது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள் நான்கனுள், இன்பம் ஒன்றினை மட்டுமே குறிக்கோளாகிக் கொண்டு பாடப்பெறுவன அகப்பொருள் பாடல்களாகும்.

### புறப்பொருள் – விளக்கம்

புறப்பொருள் என்பது வெளியுலக வாழ்க்கை பற்றியதாகும். காதல் அல்லாத பிற மானிடப் பொருட்களைப் பற்றியதாகும்.

**"புறப்பொருளாவது மறஞ்செய்தலும்,**
**அறஞ்செய்தலும் ஆகலான் அவற்றான்**
**ஆயபயன் பிறருக்குப் புலனாதலின் புறம்"[8]**

என்கிறார் இளம்புரணர்.

### அகத்திணையும், அமைப்பு முறையும்

சங்க அக இலக்கியங்கள் கூறும் பொருளும், அவற்றைக் கூறும் முறையிலும் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குட்பட்டு விளங்கு வதைக் காண முடிகிறது. இவ்வகைப் பாடல்களில் இடம்பெறும் உணர்வுகள் உலகியலில் பொதுத்தன்மையைக் கொண்டு விளங்குகின்றன. எனவே அவற்றின் அடிப்படையில் அமைந்த அகத்திணைப் பொருளான காமமோ பருவம் நிரம்பிய உயர்திணை, அஃறிணை உயிர்க்கெல்லாம் பொதுவாய் அமைந்த ஒன்றாகும். இதனை,

**"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது**
**தான் அமர்ந்து வருஉம் மேவற்றாகும்"[9]**

என்னும் நூற்பாவில் எல்லாவுயிர்க்கும் இன்பமென்பது தன் மனம் பொருந்தி வரும் விருப்பத்தையுடையது என்கிறார் தொல்காப்பியர். இத்தகைய இன்ப

உணர்வை, காமத்துடிப்பை நெறிப்படுத்திய பொருளாகக் கொண்டு அமைந்தவை அகத் திணைப் பாடல்களாகும்.

தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற குறிக்கோள் நெறியுடன் வாழ்ந்த வர்கள் சங்கப் புலவர்கள் அதனால் அவ்விலக்கியங்களைப் படைத்து உலகிற்கு வழங்கினர் எனலாம்.

## தொல்காப்பித்தில் வழக்கு

நாடக வழக்கும் உலகியல் வழக்கும் இணைந்த புலன் நெறி வழக்கில் அகப்பொருள் பாடல்கள் அமைந்து ள்ளதைக் காண முடிகிறது. எனினும், இதனைப் பற்றிக் கூற வந்த தொல்காப்பியர்,

**"வழக்கெனப் பருவ உயர்ந்தோர் மேற்றே**
**நிகழ்ச்சி அவர்கட் டாகவான்"**[10]

என்ற நூற்பாவில் நூலின் நிகழ்ச்சி உயர்தோரைப் பற்றியதாக இருக்க வேண்டுமெனச் சுட்டுகின்றார்.

**"உலகமென்ப உயர்ந்தோர் மாட்டே"**[11]

இதில் வழக்கு என்பது உலகிலுள்ள உயர்ந்தோர் வழக்காதலை நிகண்டுகளும் கூறுகின்றன.

**"உயர்ந்தோர் கிளவி வழக்கொடு புணர்தலின்**
**வழக்குப்பழிப் படுதல் செய்யுட்குக்கடனே"** [12]

எனச் செவ்வியல் இலக்கிய மாந்தரையும், அவர் தம் மொழியையும் இலக்கியப்படுத்த வேண்டுமெனத் தொல்காப்பியம் வரை யறுக்கின்றது.

நாடக வழக்கு, உலகியல் வழக்கு பாடல் சான்ற புலனெறி வழக்கு ஆகிய மூன்றையும் முறையே,

"சுவைபட வருபனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல், உலகத்தார் ஒழுகலாற்றோடு ஒத்து வருவது, இவ்விரு வகையாலும் பாடல் சான்ற கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்க் கூறப்படுவது அகப் பொருள்"[13] என இளம்புரணர் பொருளுரைப்பதை இங்கு எண்ணிப் பார்க்க வேண்டிய ஒன்றாகும்.

## முடிவுரை

தொல்காப்பியத்தின் வழி தமிழர்களின் உண்மையான அடையாளங்களை வெளிக் கொணர்வது அறிஞர்களின் முன்னுள்ள முக்கியக் கடமையாகும். தொல்காப்பியம் வாயிலாக பண்டையத் தமிழ்ச் சமூகத்தின் அடையாளங்களை இக்கட்டுரை வாயிலாக காண முடிகிறது. தொல்காப்பியத்தில் காணலாகும் அகத்திணை, புறத்திணை மற்றும் வழக்கு குறித்த செய்திகளையும் இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

## துணை நின்ற நூல்கள்

1. வ.சு.ப மாணிக்கம் சங்க நெறி, ப.25
2. இளம்புரணனார் (உ.ஆ), தொல் பொருள்., நூல் எ.12
3. மேலது., நூ.எ.1
4. கு.மோகனராசு, திருக்குறளில் மரபுகள் ப.124
5. இளம்புரணனார்(உ.ஆ),மு.நூ.நூ.எ.92
6. மேலதூ. நூ. எ. 93
7. ஆ.இராமகிருட்டிணன், அகத்திணை மாந்தர் ப.1
8. இளம் புரணனார் (உ. ஆ), மு.நூ. நூ. எ.3
9. மேலதூ நு. எ. 27
10. மேலதூ., நூ . எ. 94
11. பிங்கல முனிவர், பிங்கல நிகண்டு , சூ. எ 134
12. இளம்புரணனார் (உ. ஆ)., மு. நூ. நூ. எ. 21
13. மேலதூ. நூ . எ. 56